**OPEN ACCESS**

Manuscript ID:
TAM-10042026-10730

Volume: 10

Issue: 4

Month: April

Year: 2026

P-ISSN: 2454-3993

E-ISSN: 2582-2810

Received: 06.03.2026

Accepted: 29.03.2026

Published: 01.04.2026

Citation:
Bhuvana, V., and G. Amala Karthiga. "Hangul Sound Found in Tamil Language." *Shanlax International Journal of Tamil Research*, vol. 10, no. 4, 2026, pp. 69–75.

DOI:
https://doi.org/10.34293/tamil.v10i4.10730

*Corresponding Author:
bhuvanatamil.2112@gmail.com

This work is licensed under a Creative Commons Attribution-ShareAlike 4.0 International License

# Hangul Sound Found in Tamil Language

**V. Bhuvana**
*Full Time Research Scholar, Department of Tamil*
*Meenakshi College of Arts and Science*
*Meenakshi Academy of Higher Education and Research (Deemed to be University)*
*Chennai, Tamil Nadu, India*
*http://orcid.org/0009-0006-6282-0313*

**G. Amala Karthiga**
*Assistant Professor, Department of Tamil*
*Meenakshi College of Arts and Science*
*Meenakshi Academy of Higher Education and Research (Deemed to be University)*
*Chennai, Tamil Nadu, India*
*http://orcid.org/0000-0002-2746-3035*

**Abstract**
*Tamil is spoken in various countries around the world. The reason is that in ancient times, people who had Tamil as their mother tongue migrated around the world, and those who migrated developed the language in those places. Generally, all languages have their own unique grammar. Similarly, the Tamil language also has its own unique grammar. Among them, the book Tolkappiyam is the first and oldest book available in the Tamil language. The book, called Ezhuthathikaram, contains grammatical rules regarding the origin of letters and their sounds. This article aims to examine only one type of grammar, the kutriyalugara grammar, from among such grammars, and to compare it with Hangul, which is considered a Korean language, to find areas of similarity.*

***Keywords:*** *Transliterature, Kutriyalukaram, Tamil Language, Korean Language, Tholkapiyam.*

## References

1. Ilampuranar. Tholkappiyam – Ilampooranam Ezhutthathigaram, Mullai Nilayam: 2024.
2. Tamil Nadu Textbook and Educational Services Corporation, Tamil Class Seven, 2025..
3. Kong & park, Sejong Korean – English edition 1A, National Institute of Korean Language:2024.
4. Thanabalasingam, U. (2023). A Phonetic Comparison of Korean and Tamil. Open Journal of Modern Linguistics, 13, 711-733. https://doi.org/10.4236/ojml.2023.135042

# தமிழ் மொழியில் காணப்படும் ஹங்குல் ஒலி

***வி. புவனா***
முழுநேர முனைவர் பட்ட ஆய்வாளர், தமிழ்த்துறை
மீனாட்சி கலை மற்றும் அறிவியல் கல்லூரி
மீனாட்சி உயர்கல்வி மற்றும் ஆராய்ச்சி நிறுவனம் (நிகர்நிலைப் பல்கலைக் கழகம்), சென்னை

***க. அமலா கார்த்திகா***
உதவிப் பேராசிரியர், தமிழ்த்துறை
மீனாட்சி கலை மற்றும் அறிவியல் கல்லூரி
மீனாட்சி உயர்கல்வி மற்றும் ஆராய்ச்சி நிறுவனம் (நிகர்நிலைப் பல்கலைக் கழகம்), சென்னை

***ஆய்வுச்சுருக்கம்***
*உலகில் உள்ள பல்வேறு நாடுகளிலும் தமிழ் மொழி பேசப்படுவதற்குக் காரணம் தொன்மைக் காலத்தில் தமிழ் மொழியைத் தாய் மொழியாகக் கொண்டவர்கள் உலகெங்கிலும் புலம்பெயர்ந்து சென்றதும் புலம்பெயர்ந்து சென்றவர்கள் அவ்விடங்களில் மொழியை வளர்த்ததும் ஆகும். பொதுவாக அனைத்து மொழிகளும் தனக்கென தனித்த இலக்கணத்தைக் கொண்டுள்ளன. அதுப்போலவே தமிழ் மொழியும் தனக்கெனத் தனித்த இலக்கணங்களைக் கொண்டுள்ளது. அதில் தொல்காப்பியம் என்னும் நூல் தமிழ் மொழியில் கிடைக்ககூடிய முதல் நூல் மற்றும் தொன்மையான நூல் ஆகும். இந்நூலில் உள்ள எழுத்ததிகாரம் என்னும் இயலில் எழுத்துகளின் பிறப்பிடம் அவற்றின் ஒலிகள் பற்றியதற்கான இலக்கண விதிகள் கூறப்பட்டுள்ளன. இவ்வாறான இலக்கணங்களிலிருந்து குற்றியலுகரம் என்னும் ஒரு வகை இலக்கணத்தை மட்டும் ஆய்வு எல்லையாக எடுத்துக்கொண்டு கொரிய மொழியாகக் கருதப்படுகிற ஹங்குல் மொழியுடன் ஒப்பிட்டு ஒத்துப்போகும் இடங்களைக் கண்டறிவதாக இக்கட்டுரை அமைகிறது.*
***குறிச்சொற்கள்:*** *ஒலிப்பெயர்ப்பு, குற்றியலுகரம், தமிழ் மொழி, கொரிய மொழி, தொல்காப்பியம்*

## முன்னுரை

தமிழர்கள் உலக நாடுகள் பலவற்றிலும் உள்ள மக்களோடு நட்புறவுக் கொண்டனர். இதனால் தமிழ் மொழி பல நாடுகளுக்குச் சென்றதை அறியமுடிகிறது. இது போல பல மொழிகளின் சொற்களைத் தமிழ் மொழி ஏற்றுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது. இவை வேற்று நாட்டின் படையெடுப்பாலும் நிகழ்ந்தது. இருப்பினும் தமிழ் மொழி பிறமொழி சொற்களின் கலப்பு இன்றி இயங்கக்கூடிய மொழியாகும். இம்மொழி கிழக்காசிய மொழியான கொரிய மொழியுடன் ஒலியமைப்பில் பல இடங்களில் ஒத்துக்காணப்படுகிறது. அவற்றை நேரடியாக எடுத்துக்கூறும் போது சில இடங்கள் பொருந்தி காணப்படுவதில்லை. எனவே பழமையான இலக்கணமான தொல்காப்பியம் கூறும் இலக்கணம் வழி இரண்டு மொழிகளுக்கும் உள்ள ஒலியமைப்பில் இருக்கக்கூடிய ஒற்றுமைகளும் எடுத்தாளப் பட்டுள்ளது.

## ஒலிபெயர்ப்பில் ஏற்படும் சிக்கல்கள்

பொதுவாக ஒரு மொழியிலிருக்கும் சொல்லை இன்னொரு மொழிக்கு கடத்தும் போது எழுத்து பெயர்ப்பு (Letter to Letter Transliteration) மற்றும் ஒலிபெயர்ப்பு (Sound to Sound Transliteration) என்ற இரண்டு வகைகளில்

கொண்டுச்செல்வர் ஒலிப்பெயர்ப்பாளர்கள். தமிழ் மொழியிலிருந்து ஹங்குல் மொழிக்கு ஒலிபெயர்ப்பு செய்யும் போது ஒலிபெயர்ப்புக்கு ஏற்றவாறு கொண்டு செல்வதில் சில இடங்களில் சிக்கல்கள் ஏற்படுகின்றன.

### எடுத்துக்காட்டு

கடுகு - Kaduku - 가두구 – 가드그

தமிழில் வழங்கக்கூடிய 'கடுகு' என்னும் சொல்லாடல் ஒலியமைப்பில் Kaduku என்று வழங்கப்படுகிறது. இச்சொல்லானது ஹங்குல் மொழிக்கு எழுத்து பெயர்ப்பு செய்யும் போது எழுத்து பெயர்ப்பின் மூலம் கொண்டு செல்ல 가두구 என்றும் ஒலிபெயர்ப்பில் 가드그 என்றும் கொண்டு செல்ல வேண்டியுள்ளது.

### தொல்காப்பியரின் ஒலி அளவு

**கண்ணிமை நொடியென வவ்வே மாத்திரை**
**நுண்ணிதி னுணர்ந்தோர் கண்டவாறே.**
**(தொல்எழுத்து: நூல்: 7)**

இதன் விளக்கமானது கண் இமைகள் இமைப்பதற்கும் விரல்களினால் சுட்டுவதற்கும் எடுத்துக்கொள்ளும் நேரம் மாத்திரை அதாவது எழுத்துகளின் ஒலிப்புமுறை என்பதை இலக்கணம் நன்கறிந்தவர் கண்ட நெறி என்பதாகும்.

### தமிழ் எழுத்துகளின் ஒலி அமைப்பு

தமிழ் மொழியின் பழமையான இலக்கண நூலாகக் கருதப்படுகிற தொல்காப்பியம் தமிழ் எழுத்துகளுக்கான ஒலிகளைக் குறிக்க மாத்திரை அளவு கூறுகிறது.

**மெய்ய தளபே யரையென மொழிப**
**அவ்விய னிலையும் மேனை மூன்றே**
**(தொல்; நூன்-12)**

இதன் விளக்கம் மெய் எழுத்துகளுக்கு ஒலிப்பு முறை என்பது அரை மாத்திரை எனவும் இம்முறை சார்பெழுத்தாகிய குற்றியலிகரம், குற்றியலுகரம் மற்றும் ஆய்தம் அவற்றிற்கும் அரை மாத்திரை எனவும் ஒலிப்பு முறையாக கூறப்பட்டுள்ளது. இதனால் குற்றியலுகர எழுத்துகளுக்கான ஒலிப்புமுறையும் அதன் அளவும் வெளிப்படுகிறது. மேலும், தமிழ் எழுத்துகளும் கொரிய எழுத்துகளும் ஒத்த தன்மையுடய ஒலி வடிவங்களைக் கொண்டது என எடைமுறை ஆய்வு முடிவுகள் தெரிவிக்கின்றன (A Phonetic Comparison of Korean and Tamil).

### எடைமுறை (Weighted Method)

தமிழ் மொழியில் ஒலிகளின் அளவுகளைக் குறிப்பிடுவதற்கு என இலக்கண முறைகள் இருக்கிறது. அவை மாத்திரை என்று அழைக்கப்படுகிறது. எனினும், ஒலிகளுக்கு இடையில் உள்ள மொழியியல் ஒப்பாய்விற்கு எடை முறை பயன்படுத்தப்படுகிறது. இவை வெவ்வேறு எழுத்து வடிவத்தில் உள்ள ஒலிகளை ஒப்பிட்டு ஆய்வு செய்வதற்கு பயன்படுகிறது.

**எடுத்துக்காட்டு - என் - யென்**

ஆகிய இரண்டு வடிவங்களை உச்சரித்தால் அவை இரண்டும் ஒரே மாதிரியான ஒலி வடிவங்களை ஏற்பது தெறியவருகிறது. இவை ஒரே மொழியைச் சார்ந்த வேறு வேறு வரிவடிவங்கள் ஆகும். இந்த எடை முறை ஆய்வு வேறு மொழிக்குள் நிகழும் ஒத்த ஒலியுடைய வெவ்வேறு எழுத்து வடிவங்களை ஒப்பிட்டு ஆய்வு செய்யும் முறையாகும்.

### மேலும் சில எடுத்துக்காட்டுகள்

| | | |
|---|---|---|
| கவிஞர் | - | கவின்யர் |
| புற்று | - | புட்ரு |
| மஞ்சள் | - | மன்ஜல் |

ஆகிய சொற்களை ஒலிக்கும் போது எழுத்து முறையில் பயன்படுத்தும் வடிவங்களாக கவிஞர், புற்று, மஞ்சள் கிடைக்கின்றன. இவை கவின்யர், புட்ரு, மன்ஜல் ஆகிய ஒலிவடிவங்களில் வேறு எழுத்துகளைக் கொண்டு ஒலிக்கப்பெற்றாலும் அதன் பொருள் ஒன்றாக இருப்பதை ஒப்பாய்வு

செய்ய பயன்படுவது இந்த எடை முறை ஆகும். இந்த எடை முறையானது இரண்டு வேறு வேறு மொழிகளில் உள்ள ஒத்த ஒலியுடைய எழுத்துகள் பொருந்தும் இடங்களை ஆராயப் பயன்படுகிறது.

## கொரிய மொழி எழுத்துகள்

கொரியாகக் கருதப்படுகிற ஹங்குல் மொழியில் உயிர் எழுத்துகள் × 08 ஆகவும், கூட்டொலி உயிர் எழுத்துகள் × 13 ஆகவும், மொத்தம் × 21 ஆகவும் உள்ளன. மெய் எழுத்துகள் × 10 ஆகவும், கூட்டொலிமெய் எழுத்துகள் × 09 ஆகவும், மொத்தம் - 19 ஆகவும் உள்ளன. எனவே இதன் மொத்த எழுத்துகளின் எண்ணிக்கை தமிழ் எழுத்து களின் எண்ணிக்கையை விட அதிகமாகும். தமிழ் மொழியில் உள்ள பல ஒலிகளுடன் ஒத்த ஓசையுடய ஒலி வடிவங்கள் இம்மொழியில் இருப்பதைக் காணமுடிகிறது.

பண்டையத் தமிழ் பிராமி என அழைக்கப்படும் தமிழி எழுத்துகளும் தமிழ் மொழியில் பயன்பாட்டில் இருந்த வட்டெழுத்துகளும் பின் நாளில் தோன்றிய தமிழ் எழுத்துகளும் ஹங்குல் மொழியின் வரிவடிவத்தோடு ஒத்துப்போகின்றன. பவுத்தம் மற்றும் இந்து மதம் ஆகிய இரண்டு மதங்களும் பிற நாடுகளுக்குப்பரவியபோது பிற நாடுகளுக்குரிய எழுத்துருவாக்கம் தோன்றி இருக்கலாம் என்னும் ஆசிரியரின் கருத்து இங்கு நோக்கத்தக்கது (கல்வெட்டுக்கலை).

தமிழி, வட்டெழுத்து மற்றும் தமிழ் எழுத்துகளின் 'ல' கர எழுத்தானது ஒத்துப் போவதைப் பார்க்க முடிகிறது. இந்த 'ல' கர எழுத்தானது ஹங்குல் மொழியில் செங்குத்து நிலையிலிருந்து மாறி 'ர' கர மற்றும் 'ல' கர ஒலிவடிவங்களுக்கான எழுத்தாக உருவம் பெற்றுள்ளன. இதுபோன்று தமிழில் 'ந' கர ஒலிவடிவத்திற்காக தமிழ் வட்டெழுத்தில் காணக்கூடிய எழுத்தானது ஹங்குல் மொழியில் 'ண' கர, 'ந' கர மற்றும் 'ன' கர ஆகிய மூன்று ஒலிவடிவங்களுக்கும் ஒரே எழுத்து வடிவம் கிடைக்கின்றது. ஹங்குல் மொழியில் 'ட' கர மற்றும் 'த' கர ஒலிவடிவத்திற்குப் பயன்படுத்தக்கூடிய எழுத்து வடிவமானது தமிழ் மொழியின் வரிவடிவங்களான தமிழி, வட்டெழுத்து மற்றும் தமிழ் எழுத்துகளின் அனைத்து 'ட' கர ஒலிவடிவ எழுத்துகளுடன் ஒத்துப்போகிறது.

'ப' கரத்திற்காக ஹங்குல் மொழியில் பயன்படுத்தக்கூடிய எழுத்தானது தமிழ் மொழியில், மேல் இணைப்புக் கோடு மட்டும் இன்றி ஒரே வடிவத்தில் கிடைக்கிறது. 'ம' மகரத்திற்காகப் பயன்படுத்தக்கூடிய ஹங்குல் எழுத்து 'ம' கர ஒலி வடிவில் தமிழ் மொழியில் உள்ள எழுத்துகளோடு ஒத்துப் போகிறது. எனினும் வார்த்தைகளோடு சேர்த்துவாசிக்கும்போது 'ப' கரஒலியிலேயே உச்சரிக்கப்படுகிறது.

'க' கர தமிழ் மொழிகளோடு ஒப்பீட்டுப் பார்க்கையில் தமிழ் எழுத்துடன் ஒத்துப் போகிறது. தமிழ் மொழியில் 'ஈ' காரத்திற்கு பயன்படுத்தக்கூடிய எழுத்து வடிவமானது தமிழியிலும் வட்டெழுத்திலும் ஒரு கோட்டின் இரு பக்கங்களிலும் புள்ளியிட்டு பயன்படுத்தப்பட்டுள்ளன. எழுத்துகளுக்கு புள்ளி இட்டும் இடத்திற்கேற்ப புள்ளி இடாமலும் பயன்படுத்தப்பட்டுள்ளன. புள்ளி இடாமல் எழுதப்பட்ட இம்முறையே ஹங்குல் மொழியில் 'இ' கரம் மற்றும் 'ஈ' காரத்திற்கு பயன்படுத்தப்படுகிறது. தமிழ் மொழியில் உள்ளது போன்று ஹங்குல் மொழியில் குறில் மற்றும் நெடில் என்னும் ஒலி வகைகள் இல்லை. ஆனால், குறில் ஓசைகளுக்கான எழுத்துகளும் நெடில் ஓசைகளுக்கான எழுத்துகளும் உள்ளன. சில இடங்களில் ஒலிகளின் தேவைக்கேற்ப உச்சரிக்கும் வழக்கத்தினைப் பின்பற்றுகின்றனர்.

ஹங்குலில் 'ச' கர ஒலிக்காகப் பயன் படுத்தும் எழுத்தானது மொழிக்கு முதலில் 'ச' கரமாகவும் மொழிக்கு இறுதியில் 'த' கரமாகவும் ஒலிக்கிறது.  என்ற சொல்லானது 'ஒத்' என உச்சரிக்கப்படுகிறது.

ஆனால், 'ㅅ' என்பது பொதுவாக 'ச' கரமாக ஒலிக்கப்படுகிறது. 'ப' கரம் 'ம' கரமாக மாறி ஒலிக்கும் இடங்கள் உண்டு. எடுத்துக்காட்டாக, 감사합니다 × கம்சஹம்னிடா' என்னும் சொல்லைக் கவனித்தால் இதில் இடம் பெறும் 'ㅂ' என்பது 'ப' கர ஒலிக்கான எழுத்து வடிவம் பெற்று கம்ச + ஹப்னிடா என்னும் இரண்டு சொற்களும் இணையும் இடங்களில் இவை 'ம' கரமாக மாற்றமடைந்து கம்ச ஹம்னிடா என்று ஒலிப்பதைக் காண முடிகிறது.

### INNOVATION and Retention

ஒரு மொழியில் இருக்கும் வேர்ச்சொற்களை வேறு மொழியில் உள்ள வேர்ச்சொற்களுடன் ஆராயும் போது அவை ஒத்துப்போகும் இடங்களைக் கண்டறிய இந்த முறை பயன்படுகிறது. இரண்டு வெவ்வேறு மொழிகளுக்கு இடையில் உள்ள வேர்ச்சொற்களுக்கு இடையில் மாற்றங்கள் இன்றி ஒத்த ஒலியுடைய சொற்கள் கிடைக்குமாயின் அவை Retention என்றும் இரண்டு மொழிகளுக்கு இடையில் உள்ள வேர்ச்சொற்களுக்கு இடையில் சிறிதளவில் மாற்றம் பெற்றும் பொருள் ஒத்துக்காணப்பட்டால் அவை Innovation என்றும் அழைக்கப்படுகிறது.

### தமிழ் ஒலிகள் மற்றும் கொரிய ஒலிகள்

தமிழ் மொழியில் கூட்டொலிகளாகக் கருதப்படுவன 'ஐ' மற்றும் 'ஔ' ஆகும். இவை 'அ', 'இ' ஆகிய இரண்டு ஒலிகளின் கூட்டு வடிவமாக 'ஐ' எனவும் 'அ' மற்றும் 'உ' என்னும் இரண்டு ஒலிகளின் கூட்டு வடிவமாக 'ஔ' என்பது உள்ளது. இந்த கூட்டொலிகள் கொரிய மொழியில் 'அ - 아' மற்றும் 'இ - -이' சேர்ந்து 'ஐ' என்பதற்கான தனி ஒலி வடிவங்களாகவும் 'அ × 아 ' மற்றும் 'உ × 우' என்பவைச் சேர்ந்து 'ஔ' என்பதற்கானத் தனி ஒலிவடிவங்களாகவும் இடம் பெறுகின்றன.

### எடுத்துக்காட்டு

தமிழ் மொழியில் 'ஐயோ' என்னும் உருபன் வடிவம் அதிர்ச்சி உணர்வை வெளிப்படுத்துவதாக இடம்பெறுகிறது. இந்த வடிவம் கொரிய மொழியில் 'அஇகோ' என்ற வடிவம் பெற்று வழங்கப்படுகிறது. இதுவும் அதிர்ச்சி நிலையை வெளிப்படுத்தப் பயன்படும் சொல்லாக வழங்கப்பட்டு வருகிறது. முதல் இரண்டு எழுத்துகளும் தனி எழுத்துகளாவும் அடுத்து வரக்கூடிய எழுத்தான 'யோ' என்னும் வடிவம் கொரிய மொழியில் 'கோ' என மாற்றம் பெற்றுள்ளது. இம்மாற்றரத்தை மொழியியலில் Innovation என்று குறிப்பர். அதாவது எழுத்து வடிவமும் ஒலிவடிவமும் மாறாமல் இரு மொழிகளிலும் ஒத்த பொருள் பெற்று வரும் உருபன்கள் Innovation முறையில் அடங்குகிறது. எனவே, 'அஇகோ' ஆகிய தனி எழுத்து வடிவங்களைக் கொண்டு '아이' என்று தனி ஒலி வடிவங்களைப் பெற்று இரு மொழிகளிலும் ஒரு பொருள் கூறும் சொற்களாகக் கிடைக்கின்றன.

இதில் மற்றொரு எடுத்துக்காட்டாக 'ஆயி' என்னும் உருபனை எடுத்துக் கொள்ளலாம். இந்த வடிவம் தமிழ் மொழியில் பெண் குழந்தையைக் குறிக்கும் வடிவமாக உள்ளது. தமிழகப் பகுதிகளில் பெரும்பாலாக 'அம்மாயி' மற்றும் 'அப்பாயி' போன்ற சொற்களும் வழங்கப்படுகிறது. இச்சொற்கள் அம்மாவின் அம்மா - அம்மாயி என்றும் அப்பாவின் அம்மா அப்பாயி என்றும் வழங்கப்படுவதைக் காணமுடிகிறது. மேற்கூறிய சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு தமிழ் மொழியில் ஆயி என்னும் சொல் பெரும்பான்மையாக பெண்களைக் குறிக்கும் சொல்லாகப் பயின்று வருவதையும் குறிப்பாக பெண் பிள்ளைகளைக் குறிக்க பயின்று வந்துள்ளதையும் அறிய முடிகிறது. கொரிய மொழியில் இந்த ஆயி என்னும் சொல் 아이 என்று நேராக ஒலிக்கப்படுகிறது. இதன் பொருள் குழந்தை என்பதாகும். எனவே, ஒலி அமைப்பிலும் பொருள் அமைப்பிலும்

மாற்றம் கொள்ளாமல் இரண்டு மொழிகளிலும் ஒத்த வடிவமாக இருப்பதால் இது Retention என்பதில் அடங்கும்.

## குற்றியலுகர ஒலி வடிவம் மற்றும் ஹங்குல் ஒலி வடிவம்

குற்றியலுகரம் என்பது கு, சு, டு, து, பு, று ஆகிய ஆறு எழுத்துகளின் ஒலி அமைப்பிடங்கள் இறுதி எழுத்துகளாக வரும் போது அவற்றின் ஒலி அமைப்பு பெறும் இடங்கள் குறித்து தொல்காப்பியம் முதல் உள்ள இலக்கணங்கள் குறிப்பிடுகின்றன. இவை ஆறு வகைகள் ஆகும்.

நெடில் தொடர்க் குற்றியலுகரம் - பாகு, மாசு, காடு, தாது, ஆறு
ஆய்தத்தொடர்க் குற்றியலுகரம் - எஃகு, அஃது
உயிர்தொடர்க் குற்றியலுகரம் -அரசு, கயிறு, ஒன்பது, வரலாறு
வன்தொடர்க் குற்றியலுகரம் -
பாக்கு, பேச்சு, பத்து, உப்பு, பற்று
மென்தொடர்க் குற்றியலுகரம் - பங்கு, மஞ்சு, வண்டு, பந்து, அம்பு, கன்று
இடைத்தொடர்க் குற்றியலுகரம் - எய்து, மார்பு, சால்பு, மூழ்கு

மேல் குறிப்பிட்ட ஆறு வகையான குற்றியலுகரங்களை உச்சரித்துப் பார்த்தோமானால் இறுதியில் உள்ள அனைத்து எழுத்துகளும் தனது ½ மாத்திரை அளவில் இருந்து குறைந்து ¼ மாத்திரையாக ஒலிப்பதைக் காணமுடிகிறது. இறுதியில் ஒலிக்கக் கூடிய இந்த ஒலி வடிவம் 'உ' கரத்தை அழுத்தம் கொடுத்து ஒலிப்பதில்லை. எனவே தான் இந்த ஒலிவடிவம் குறைகிறது. இப்படி குறைந்து ஒலிக்கும் போது அந்த ஒலியைக் குறிப்பதற்கான எழுத்து வடிவம் தமிழ் மொழியில் இல்லை. ஆனால், இந்த ஒலியைக் குறிக்க கொரிய மொழியான ஹங்குல் மொழியில் எழுத்து வடிவம் உள்ளது. இந்த ¼ மாத்திரை குற்றியலுகர ஒலியைக் குறிப்பிட '으' என்னும் ஒலி வடிவம் ஒலிக்கக் காணலாம். இந்த கொரிய மொழி ஒலி வடிவம் ஆங்கிலத்தில் 'eu' என்று இரண்டு ஒலி வடிவங்களின் கூட்டாக ஒலிக்கப்படுறது.

எடுத்துக்காக்காக, 'காது' என்பதை உச்சரித்தால் 'கா' என்பது தனது இரண்டு மாத்திரை அளவில் ஒலிக்கும். ஆனால் 'து' என்பது முழுமையான ஒலி வடிவத்தைப் பெறாமல் ஒலிக்கிறது. காது என்பதில் இறுதி எழுத்தான து என்பதைப் பிரித்தால் த்+உ எனப் பிரியும். 'உ'கரம் என்னும் குறிலானது தனித்து ஒலிக்கையில் முழுமையான ஒலியாக ஒலிக்கிறது. ஆனால், காது என்பதில் இறுதியில் உள்ள 'உ'கரமானது முழுமையான ஒலியைப் பெறாமல் பாதியில் நின்றுவிடுவதைக் காணலாம்.

## முடிவுரை

தமிழ் மொழியில் மொழி அமைப்பைக் கூறும் இலக்கணங்கள் காலம்தோறும் பல நூற்றாண்டுகளாகத் தோன்றி வருகின்றன. அவற்றில் முதல் இலக்கண நூல் தொல்காப்பியம் ஆகும். இந்த இலக்கணம் எழுத்துகளுக்கு கூறிய ஒலி அளவுகளுக்கு ஏற்ப கொரிய ஒலிகளில் உயிர் எழுத்தாக அவ்வொலி வடிவம் ஏற்று வந்திருக்கிறது. '으' என்னும் எழுத்தானது ஒலிப்பெயர்ப்பு முறையில் தமிழ் இலக்கண வகையில் ஒன்றான குற்றியலுகர இலக்கணங்களோடு ஒத்துப்போகும் இடங்களைக் கண்டறிய முடிகிறது. தமிழ் மொழியில் உள்ள சொற்கள் கொரிய மொழியில் ஒலியமைப்பிலும் பொருள் அமைப்பிலும் மாறாமல் இருப்பதையும் காணமுடிகிறது. சில இடங்களில் கொரிய மொழியின் தன்மைக்கு ஏற்ப மாறியும் பொருள் அமைப்பில் மாறாமலும் கிடைக்கிறது.

## துணைநூற்பட்டியல்


1. இளம்பூரணர் தொல்காப்பியம் (உ-ஆ) எழுத்ததிகாரம், முல்லை நிலையம்: 2 024.
2. தமிழ்நாடு பாடநூல் மற்றும் கல்வியியல் பணிகள்கழகம்,தமிழ்வகுப்புஏழு, 2025.
3. Kong & park, Sejong Korean – English edition 1A, National Institute of Korean Language:2024.
4. Thanabalasingam, U. (2023). A Phonetic Comparison of Korean and Tamil. Open Journal of Modern Linguistics, 13, 711&733. https://doi.org/10.4236/ojml.2023.135042.